தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மாசி 15, யுவ—திருவள்ளுவர் ஆண்டு, 2027

1996 பிப்ரவரி 27, செவ்வாய்க்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 10.00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"சூழாமல் தானே முடிவெய்தும் தம்குடியைத்
தாழாது உஞற்று பவர்க்கு"

தம் குடிமக்கள் உயர்வதற்கான செயலை விரைந்து முயன்று செய்வோருக்கு, அவர் மேற்கொண்டுள்ள அச்செயல் எவ்விதத் தடையுமின்றி தானே நிறைவேறும்.

1. தகவல் கோரல்

(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மதுரையில் நடந்த பிரச்சினை பற்றி எடுத்துக் கொள்கிறேன். (குறுக்கீடு) திரு. பழனிசாமி, உட்காருங்கள், 1992-லே நடந்த சம்பவத்தைப்பற்றி எடுக்க வேண்டியிருக்கிற காரணத்தால் அமைச்சருக்கு அதை அனுப்பியிருக்கிறேன். அதை நாளை எடுத்துக் கொள்கிறேன் (குறுக்கீடு). திரு. ஞானசேகரன், வேதாரண்யம் மீனவர்கள் பற்றியும் எடுத்துக் கொள்ளப்படும் என்று சொல்லியிருக்கிறேன். அது கடலிலே ரொம்பதூரம் போய்ப்பார்க்க வேண்டும். திரு. ஞானசேகரன், உட்காருங்கள்.

(ஆ) அனுமதி மறுக்கப்பட்ட பிரச்சினை குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பரிதி, போக்குவரத்துத் துறையைப் பற்றிக் கொடுத்ததற்கு அனுமதி மறுத்திருக்கிறேன். ஒரு சம்பவம் நடந்ததாகச் சொல்லியிருக்கிறீர்கள். அந்தச் சம்பவம் பற்றி எனக்கு எவ்வித ஆதாரமும் தராத காரணத்தால் அதற்கு அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு)